www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | |

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024-25

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 15X1=15

1. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு

அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு

இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

2. தீரா இடும்பை தருவது எது?

அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்

இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

4. "மிசை" – என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

5. எண்ணெய் ஊற்றி ------ விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு -----.

தொடரின் விடுபட்ட இரு இடங்களையும் ஒரு சொல்லைத் தேர்ந்தெடுக்க.

அ) விலங்கு ஆ) அகல் இ) கால் ஈ) அலை

6. "காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! – எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே ........" – இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

7. கல்லாடம் படித்தவரோடு ------

தொடரை நிறைவு செய்யும் விடையைத் தேர்க.

அ) சிலைமேல் எழுத்து ஆ) செந்தமிழும் நாப்பழக்கம்

இ) சொல்லாடாதே ஈ) இடமெல்லாம் சிறப்பு

8. பொருந்தாத இணை எது?

அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

9. இந்தியநாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர்

அ) ச. அகத்தியலிங்கம் ஆ) குமரிலபட்டர் இ) ஹீராஸ் பாதிரியார் ஈ) கால்டுவெல்

10. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள்

i) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ii) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக்கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

iii) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

அ) (i), (ii) ஆகியன சரி (iii) தவறு ஆ) (i), (iii) ஆகியன சரி (ii) தவறு

இ) (i) தவறு (ii), (iii) சரி ஈ) மூன்றும் சரி



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

11. ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் ------ பார்த்தான்.

இத்தொடரில் விடுபட்ட இடத்தை நிரப்பும் பொருத்தமான மரபு இணைச் சொல்லைத் தேர்க.

அ) மேலும் கீழும் ஆ) மேடும் பள்ளமும் இ) நகமும் சதையும் ஈ) முதலும் முடிவும்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (12,13,14,15)

*"குந்த நிழல்தரக்*
*கந்த மலர்தரக்*
*கூரை விரித்தஇலை!*

*வெந்து கருகிட*
*இந்த நிறம்வர*
*வெம்பிக் குமைந்தனையோ!"*

12. "கந்தம்" என்ற சொல்லின் பொருள்

அ) உட்கார ஆ) மணம் இ) மேல் ஈ) கவலை

13. "வெந்து" என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

14. இக்கவிதையின் ஆசிரியர்

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) தமிழ் ஒளி இ) வைரமுத்து ஈ) பாரதியார்

15. கவிஞர் இக்கவிதைக்குக் கொடுத்துள்ள தலைப்பு

அ) நிலைபெற்ற சிலை ஆ) தமிழோவியம் இ) கண்ணப்பன் கிளிகள் ஈ) பட்டமரம்

பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

**வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) அறிவியல் முன்னேற்றத்தால், மனிதனின் பயணநேரம் குறைந்துள்ளது.

ஆ) சங்க இலக்கியமான கலித்தொகையில், ஏறுதழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

17. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

18. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

19. நிலம் போல் யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?

20. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

21. 'எனைத்தானும்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும்.** 5X2=10

22. ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

சேர்ந்து – சேர்த்து

23. பகுபத உறுப்பிலக்கணம் தருக. பரப்புமின்

24. கலைச்சொற்கள் எழுதுக.

அ) Missile ஆ) Hero Stone

25. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

26. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

27. நீங்கள் செய்த நற்செயலுக்காகப் பாராட்டுப் பெற்ற சூழல்கள் இரண்டினை எழுதுக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

28.தன்வினை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29.பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக..

30.வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையான நீட்சியை விளக்குக.

31.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும். முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் முதலியவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர். இவற்றின் மூலம் பருப்பொருள்களை மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. நுண்பொருள்களை உணர்த்த இயலவில்லை. அதனால், ஒலிகளை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி, காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று மொழியாக வளர்ந்தது.

வினாக்கள்:

1. மொழி என்பது யாது?
2. முதலில் மனிதர் தம் எண்ணங்களைப் பிறருக்கு எவ்வாறு தெரிவிக்க முயன்றனர்?
3. மொழி எவ்வாறு வளர்ந்தது?

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2X3=6

**34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32.பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

33.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34.அடி மாறாமல் எழுதுக.

அ) 'அறிவியல் என்னும்' எனத் தொடங்கி 'பொருத்துங்கள்' என முடியும் வைரமுத்து பாடல்

(அல்லது)

ஆ) 'காடெல்லாம் .........' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

பிரிவு – 3 (மதிப்பெண்கள்:6)

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2X3=6

35.வல்லினம் இட்டும், நீக்கியும், எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

36.விகாரப்புணர்ச்சியின் மூன்று வகைகள் யாவை?

37.துணைவினைகளின் பண்புகளை எழுதுக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38.அ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) கேள்வி அதிகாரத்தில் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ள கருத்துகளில் நான்கினை எழுதுக.

39.அ) சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.


(அல்லது)

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.



Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

40.காட்சியைக் கண்டு கவிநுற எழுதுக.



41.தன்விவரக் குறிப்புப் படிவத்தை நிரப்புக.

42.அ) பெற்றோர் மனம் மகிழுமாறு நீங்கள் செய்த செயல்கள் ஐந்தினைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்.

1. Every flower is a soul blossoming in nature - **Gerald De Nerval**
2. Sunset is still my favourite colour, and rainbow is second - **Mattie Stepanek**
3. An early morning walk is a blessing for the whole day - **Henry David Thorean**
4. Just living is not enough ....... one must have sunshine, freedom and little flower - **Hans Christian Anderson.**

பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43.அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச் செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

44.அ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

45.அ) முன்னுரை – சுற்றுச் சூழல் – காற்று மாசு – நிலமாசு – நீர்மாசு – மாசுபாட்டைக் குறைக்கும் வழிமுறைகள் – முடிவுரை.

இக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) முன்னுரை – தமிழர் பண்பாடு – தற்கால மாற்றங்கள் – தொடரும் பண்பாட்டுக் கூறுகள் – முடிவுரை.

இக்குறிப்புகளைப் பயன்படுத்தி 'தமிழர் பண்பாட்டின் சிறப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

Scanned with CamScanner